**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 130 of 2024

DATE : 20.05.2025

Depositions of witness for Prosecution

PW : 2

| | | | |
|---|---|---|---|
| Name | ஈஸ்வரன் | Caste | |
| Father/Husband's Name | வேல்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2025

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை : –**

1) நான் துலுக்கப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனக்கும் எதிரிக்கும் பொது நடைபாதை பிரச்சினை இருந்து வந்தது. கடந்த 19.09.2021 ம் தேதி மாலை 5.30 மணிக்கு நான் மாட்டு தொழுவில் இருந்தேன் அ.சா.1 காட்டில் வேலை செய்து கொண்டிருந்தார். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. அதனை அ.சா.1 விலக்க வரும் போது எதிரி மண்வெட்டியால் இடது முழங்கையில் வெட்டிவிட்டார். ஆட்டோ மூலம் நானும் அ.சா.1 ம் சென்று நத்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு காயம்பட்ட அ.சா.1 ஐ வத்திராயிருப்பு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சண்டையை விலக்க வந்த என் மனைவி முத்துமாரியை ஆஜர் எதிரி தேவிடியா ஏடி என்ற தகாத வார்த்தையால் பேசினார். அங்கிருந்த சக்திவேல், தங்கராஜ் ஆகியோர்கள் விலக்கிவிட்டார்கள். எதிரி போகும் போது அ.சா.1 கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு